**நாள். 11.03.2025**

**M.C No.02/2023**

**ம.சா.1**

**திருமதி. மாதம்மாள்**

க/பெ. நாகராஜ்

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

2ம் எதிர்மனுதாரரான எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டு, பலஇடங்களில் எலும்புமுறிவு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மகனை பார்க்க போனேனா என்றால் இல்லை. மூன்றாம் தரப்பினர்கள் மாண்புமிகு தருமபுரி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் நொடிப்பு நிலை வழக்கு தாக்கல்செய்துள்ளார்கள் என்றால் சரிதான். முனுசாமி மற்றும் சிலர் என்னிடம் வட்டிக்கு கடன் வாங்கி திருப்பி தராத நிலையில் நொடிப்பு நிலை வழக்கு எண்.07/2020 என்ற வழக்கை தாக்கல்செய்துள்ளார்கள் என்றால், என்னிடம் யாரும் கடன் வாங்கவில்லை. பீமன் மகன் முனுசாமிக்கு எதிராக பென்னாகரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். ஏலச்சீட்டுக்காக கட்டிய தொகையை கொடுக்காததால் புகார் கொடுத்தேன். ரூ.1,00,000/- ஏலச்சீட்டு போட்டிருந்தேன். அந்த சீட்டு 20 மாதங்களுக்கு உரிய சீட்டாகும். மேற்படி சீட்டானது சுமார் 4 வருடத்திற்கு முன்பிருந்து கட்டப்பட்டது.

சீட்டின் மாதாந்திர தவணை தொகையானது ரூ.4,000/- முதல் ரூ.5,000- வரை இருக்கும் என்றால் சரிதான். எனது வருமான வசதி இல்லையென்று மனுவில் சொல்லியுள்ள சங்கதி பொய்யானது என்றால் சரியல்ல. வீட்டிலிருந்த பணம் மற்றும் நகை ஆகியவற்றை எடுத்துகொண்டுபோய் வெளிநபர்களுக்கு வட்டிக்கு விட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சுகபோகமாக மேற்படி தொகையை நான் வட்டிக்கு விட்டுவிட்டு வட்டிதொகையுடன் சுகபோகமாக வாழ்கிறேன் என்றால் சரியல்ல. என்னை தவிர எனது மகன், மகள், கணவர் அனைவரும் ஒன்றாக தான் உள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது கணவர் ஊனமுற்றோர் என்றால் சரிதான்.

எனது கணவருக்கு மாதாந்திர பென்சன்தொகை ரூ.1,000/–ஐ ஊனமுற்றோருக்கான தொகையாக அரசிடமிருந்து பெற்றுவருகிறார் என்றால் சரியல்ல. ரூ.6,000/ பெற்றுவருகிறார். எனது கணவர் ரூ.6,000/– பென்சனாக பெற்றுவருவதாக வழக்கிற்காகவேண்டி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகன் இராணுவத்தில் பணிபுரிந்து துப்பாக்கி குண்டுகள் தாக்கி சிகிச்சை பெற்றுவந்தார் என்றால் சரிதான். அவ்வாறு துப்பாக்கி குண்டு தாக்கியதால் எனது மகனால் பணி செய்யஇயலாமல் அனுப்பிவைத்துவிட்டார்கள் என்றால் சரிதான். பணிஓய்வு பெறுவதற்கு மூன்று மாதத்திற்கு முன்பு தான் குண்டு அடிப்பட்டது. தற்போது தான் எனது மகனுக்கு இராணுவத்திலிருந்து பென்சன் வருகிறது. எனது மகன் ரேசன் கடையில் வேலைசெய்கிறார். தற்போதும் எனது மகனின் உடலில் துப்பாக்கி குண்டு உள்ளது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது.

எனது மகனுக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளார்கள் என்றால் சரிதான். எனது பேத்தி விஷ்ணுபிரியா ஆறாம் வகுப்பும், எனது பேரன் நான்காம் வகுப்பும் படிக்கிறார். எனது மகன் குண்டு அடிப்பட்டதால் ஏற்பட்ட மருத்துவ செலவினங்களுக்கும் ஏற்கனவே பெற்றிருந்த கடனை அடைப்பதற்கே எனது மகனின் ஓய்வூதிய பணம் தீர்ந்துவிட்டது என்றால் சரியல்ல. எனது மகன் எவ்வித வேலைக்கும் செல்லாததால் எனது பேரன், பேத்திகளின் பராமரிப்பு செலவினங்களுக்கு எனது மருமகளின் பெற்றோர்கள்தான் கொடுக்கிறார்கள் என்றால் சரியல்ல. எல்லா செலவினங்களையும் இராணுவம்தான் தற்போதும் பார்த்துவருவதாக சாட்சி கூறுகிறார். அதற்குண்டான ஆவணங்களை என்னால் தாக்கல் செய்யமுடியுமா ? என்றால் முடியாது. ஓய்வுபெற்ற குடும்பத்தை அரசாங்கம் பராமரிக்க வாய்ப்பே இல்லை என்றால் சரியல்ல.எதிர்மனுதாரர்கள் கஷ்ட ஜீவனம் செய்துவரும் நிலையில் வட்டிக்கு விடும் நான் ஜீவனம்சம் பெற தகுதியுடையவர் இல்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.